செ.வெ.எண். 44/ஜுன் **செய்தி வெளியீடு** நாள்: 20.06.2016

**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையையும், கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பணிக்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.06.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பென்னாகரம் வட்டம், சின்னபூம்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த அஞ்சலி, ஹரிணி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி ஆகிய நான்கு சிறுமிகள் குட்டையில் துணி துவைக்க சென்ற போது நீரில் மூழ்கி இறந்து விட்ட காரணத்தாலும் மேலும், தென்கரைக்கோட்டை கிராமத்தில் அருள்மிகு வெங்கட்டரமண சுவாமி திருக்கோவில் தெப்பக்குளத்தில் நீரில் மூழ்கி இறந்த ராகுல் என்ற சிறுவனின் குடும்பத்திற்கும் சேர்த்து ஆக மொத்தம் 3 குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இறந்த நபர் ஒருவருக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் 5 குழந்தைகளுக்கு ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும் கருணை அடிப்படையில் திரு.எம். மாதேஷ்குமார் என்பவருக்கு பாலக்கோடு வட்டம், பேவுஅள்ளி கிராம நிர்வாக அலுவலர் பணிக்கான ஆணையையும், திரு. க. பார்த்தீபன் என்பவருக்கு நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் கிராம நிர்வாக அலுவலர் பணிக்கான ஆணையையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு வீல்சேரும், 1 பயனாளிக்கு செயற்கை கையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, முதியோர் உதவித் தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 373 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. மாலதி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பிச்சைராமன், தனி துணை ஆட்சியர்கள் செல்வி வள்ளி (ச.பா.தி), மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்) திருமதி. பாப்பாத்தி, உதவி ஆணையர் (ஆயம்) திருமதி. மல்லிகா, தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.